# கிளாம்பாக்கம் வரை மெட்ரோ 2021ல் பணி துவங்க வாய்ப்பு

சென்னை, நவ. 16–

விமான நிலையம் – கிளாம்பாக்கம் இடையே, மெட்ரோ ரயில் பாதை திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதும், 2021ல் கட்டுமான பணி துவங்க, மெட்ரோ நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

சென்னை விமான நிலையத்தில் இருந்து, புதிதாக பஸ் நிலையம் அமைக்கப்பட உள்ள, கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ ரயில் திட்டத்தை நீட்டிக்க வேண்டும் என கோரிக்கை எழுந்தது.

இப்பாதை அமைக்கப்பட்டால், ஜி.எஸ்.டி., சாலையில், வாகன நெருக்கடியில் சிக்காமல், பல்லாவரம், இ.எஸ்.ஐ., மருத்துவமனை, குரோம்பேட்டை அரசு மருத்துவமனை, எம்.ஐ.டி., தொழிற்பயிற்சி மையம், மெப்ஸ், தாம்பரம் செல்லலாம்.

பெருங்களத்தூரில், ஐ.டி., தொழில்நுட்ப பூங்கா, வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் செல்ல ஏதுவாக இருக்கும் என, பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டு வந்தது.

## ஆய்வறிக்கை

இதையொட்டி, விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ ரயில் பாதையை நீட்டிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதையொட்டி, மூன்று வழிகளில், இப்பாதை அமைப்பதற்கான சாத்திய கூறுகள் குறித்து, ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் இருந்து, ஜி.எஸ்.டி., சாலை வழியாக, கிளாம்பாக்கத்துக்கு பாதை அமைப்பது. விமான நிலையத்தில் இருந்து தாம்பரம் வரை, ஜி.எஸ்.டி., சாலையிலும், முடிச்சூர் வழியாக, வண்டலூர் வரையும், அங்கிருந்து, ஜி.எஸ்.டி., சாலை வழியாகவும் கிளாம்பாக்கம் வரை பாதை அமைப்பது.



விமான நிலையத்தில் இருந்து, பல்லாவரம், அஸ்தினாபுரம், சிட்லபாக்கம், சேலையூர், தாம்பரம், முடிச்சூர், பெருங்களத்தூர், வண்டலூர் வழியாக கிளாம்பாக்கம் வரை, முழுவதும் மேம்பாலத்தில் பாதை அமைப்பதற்கான, சாத்தியகூறுகள் குறித்து, ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை, ஜி.எஸ்.டி., சாலையில், 3,500 கோடி ரூபாய் செலவில், 16 கி.மீ., பாதை அமைக்கப்பட உள்ளது.

## கட்டுமான பணி

பல்லாவரம், குரோம்பேட்டை, திரு.வி.க., நகர், தாம்பரம், இரும்புலியூர், பெருங்களத்தூர், ஆர்.எம்.கே., நகர், வண்டலூர், வண்டலூர் உயிரியல் பூங்கா, கிளாம்பாக்கம் உட்பட, 13 இடங்களில் நிலையங்கள் அமைக்க வாய்ப்புள்ளது.

இப்பாதைக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி, மெட்ரோவில் நடந்து வருகிறது. திட்ட அறிக்கை, ஓராண்டுக்குள் தயாராகிவிடும்.

இதனால், 2021ல், விமான நிலையம் – கிளாம்பாக்கம் இடையே, மெட்ரோ ரயில் பாதை கட்டுமான பணி துவங்க வாய்ப்புள்ளது.